

# மாய சூனியக்காரர்கள்

*இதேபோல ஹால்புரூக்கில் மாய சூனியக்காரர்களுக்குப் பயப்படுகிற பல மாணவர்கள் உள்ளனர்.*

ஹால்புரூக் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் இந்தியன் பள்ளியில் குதிரையேற்ற பயிற்சி ஆசிரியையாகப் பணியாற்றுகிறார் அலிசன்; அவருக்கு விசில் அடிப்பது பிடிக்கும்; ஒரு சமயம் விசில் அடிக்கும்போது ஒரு பழங்குடியின சிறுமி, அவரிடம் மாய சூனியக்கார்ரகள் பற்றிப் பேசினாள்.

"இருட்டில் விசிலடிப்பதை உடனே நிறுத்துங்கள்" என்று காய் என்கிற அந்தச் சிறுமி சொன்னாள்.

"ஏன்?" என்று அலிசன் கேட்டார்.

இருட்டில் விசிலடித்தால் மாய சூனியக்காரர்கள் வந்துவிடுவார்களெனச் சொன்னாள். அவளுடைய நவஜோ கலாச்சாரத்தில், மாய சூனியக்காரர்களுக்கு மிருகமாக மாறுகிற அல்லது ஒரு மிருகத்தின் தோற்றத்தில் வருகிற ஆற்றல் இருப்பதாக நம்பப்பட்டது.

ஆனால் எந்த மாய சூனியக்காரர்களை விடவும் தேவன் மிகவும் வல்லவரென்றும், தேவனுடைய அணியில் சேர்ந்துவிட்டால், அவள் எதற்கும் பயப்படத் தேவையில்லை என்றும் அலிசன் தைரியமூட்டினார். "நான் விசிலடிப்பதை நிறுத்தப்போவதில்லை, தேவனுடைய அணியைத் தவிர வேறு அணியில் சேர எனக்கு விருப்பமில்லை" என்று அலிசன் சொன்னார்.

அலிசன் பயப்படாததையும், தானும் தேவனுடைய அணியில் சேரலாம் என்பதையும் காய் கண்டபோது, அதன்பிறகு அவள் பயப்படவில்லை.

இதேபோல ஹால்புரூக்கில் மாய சூனியக்காரர்களுக்குப் பயப்

படுகிற பல மாணவர்கள் உள்ள னர்.

பதினைத்து வயதான எனோலா, தினமும் இரவில் தன் தோழியை அழைத்துக்கொண்டு, குதிரைகள் இருக்கிற இடத்திற்குச் சென்று தீவனம்போடுவாள்; அது அவளது பாடத்திட்டத்தின் ஒரு பகுதி. அவள் தான் முதன்முதலாக அதற்கு அனுமதி கேட்டிருந்தாள். அவளுக்கு இருட்டென்றால் பயமென அறிந்திருந்த அலிசன், ''சீக்கிரத்தில் வேலையை முடிக்கவேண்டும்'' என்கிற நிபந்தனையின் பேரில் சம்மதித்திருந்தார்.

பிறகு ஒருநாள் காலையில், முந்தின நாள் இரவில் தோழியை அழைத்துச் செல்லாமலேயே தனியாக தான் சென்றதாக எனோலா சொன்னாள்.

''குதிரைக்குத் தீவனம்போடுவதற்கு தனியாகச் சென்றது இதுதான் முதல்முறை'' என்று கூறினாள்.

அலிசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''உன்னுடன் யாரையும் அழைத்துச் செல்லவில்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லை'' என்று எனோலா சொன்னாள்.

''இருளைக் கண்டு உனக்குப் பயமில்லையா?'' என்று கேட்டார்.

உடனே எனோலா, ''என்னால் தனியாகச் செல்லமுடியாது என்று ஏன் நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''உனக்குப் பயப்படுகிற சுபாவம் உண்டல்லவா?'' என்று அலிசன் கேட்டாள்.

''உண்டுதான். ஆனால் தனியாகச் சென்றால் என்ன நடக்குமெனப் பார்க்க விரும்பினேன்'' என்றாள்.

''புரியும்படி சொல்'' என்று அலிசன் கேட்டார்.

''இருட்டில் தனியாக வருவது பாதுகாப்பு இல்லைதான். தனியாக வந்தால் மாய சூனியக்காரர்கள் வருவார்கள்'' என்று சொன்னாள்.

எனோலாவுக்கு இருளைக் கண்டால் பயமிருப்பதை அலிசன் புரிந்துகொண்டார்.

ஆனால் எனோலா, ''எனக்கு ஒன்றுமாகவில்லை'' என்று பரபரப்போடு சொன்னாள்.

''ஆம் அதுதான் உண்மை'' என்று அலிசனும் சொன்னார்.

''இல்லை, உங்களுக்குப் புரியவில்லை. இதற்குமுன் அவர்கள் என்னைப் பிடித்திருக்கிறார்கள். ஆனால் இந்த இடத்தில் அவர்களால் என்னைப் பிடிக்கமுடியவில்லை'' என்று சொன்னாள்.

அதைப்பற்றி விளக்கமாகச் சொல்லும்படி அலிசன் கேட்டார்.

''இந்தப் பள்ளி வளாகத்தில் இருக்கும்போது எதுவும் என்னை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஒரு காலை பள்ளி வளாகத்திலும், இன்னொரு காலை வெளியிலும் வைத்தால், என் பாதி உடலை அவர்கள் கொண்டுசென்று விடுவார்களோ? என்று நான் நினைப்பதுண்டு'' என்றும் சொன்னாள்.

அவ்வாறு சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

அலிசனும் சிரித்தார். தேவ

னுடைய பரலோக வல்லமையை ஹால்புரூக் அட்வென்டிஸ்ட் பள்ளி வளாகத்தில் எனோலா அனுபவித்து வந்ததை நினைத்து மகிழ்ந்தார். குதிரை கூடத்திற்கு தனியாகச் செல்ல எனோலா தீர்மானித்தது, தேவன் தம் வல்லமையைக் காட்டு வதற்கு நல்ல வாய்ப்பைக் கொடுத் தது. அவருடைய அணியில் இருப் பது மிகவும் நல்லது!

ஹால்புரூக் அட்வென்டிஸ்ட் பள்ளியானது அமெரிக்காவில் உண் மையிலேயே ஒரு ஊழியப்பள்ளி யாக இருப்பதை அந்த அனுபவம் அலிசனுக்கு நினைவூட்டியது.

ஹால்புரூக் அட்வென்டிஸ்ட் பள்ளிக்கு உதவியாக இருந்த உங் கள் பதின்மூன்றாம் வாரக் காணிக் கைக்காக நன்றி. 2018 மற்றும் 2021ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கை அந்தப் பள்ளி வளாகத்தில் மாண வர்கள் வாழ்க்கை மையம் ஒன் றைக் கட்டுவதற்குப் பயன்பட்டு வருகிறது; அந்தப் பள்ளி வளா கத்தில் மாணவர்கள் தேவன் உயி ரோடு இருப்பதையும், மாய சூனி யக்காரர்களைக் கண்டு பயப்படத் தேவையில்லை என்பதையும் உணர்ந்துகொள்கிறார்கள்.

## கதைக் குறிப்புகள்

- அரிசோனாவில் உள்ள ஹால் புரூக்கை வரைபடத்தில் காட்டுங்கள்.
- அந்தச் சிறுமியின் அடையாளத்தை மறைப்பதற்கு பெயர் மாற்றப்பட்டுள்ளது.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- வட அமெரிக்க டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதி விறக்க: bit.ly/nad-2024.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் "ஐ வில் கோ" என்ற திட்டத்தின் பின் வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 2, '10/40 சாளரம் முழுவதும், பெரிய நகரங் களில், சத்தியம் சென்றிராத பகுதிகளிலும் சத்தியம் குறைவாகச் சென்றுள்ள பகுதிக ளிலும் அட்வென்டிஸ்ட் ஊழியத்தைப் பெலப்படுத்தவேண்டும்'.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, 'தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்'.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 6, 'குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்'.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 7, "இளைஞர்கள் ஆண்டவருக்கு முதலிடம் கொடுப்பதற்கும், வேதாகம உலகக்கண்ணோட்டத்தை எடுத்துக்காட்டுவதற்கும் உதவவேண்டும்'.